## செப்டெம்பர் தீராநதி

## எழுத்தை வாழ்தல் -5

---------------------------------------

# எழுத்தாளனின் கண்ணீரே வாசகனின் கண்ணீர்

" பைத்தியக்காரர்களின் உலகிற்கு நான் போக விரும்பவில்லை", ஆலிஸ் சொன்னாள்.

" ஓ நீ அதிலிருந்து தப்பிக்கவே முடியாது " பூனை சொன்னது:" நாம் எல்லோருமே பத்தியங்கள்தான். நான் பைத்தியம் . நீ பைத்தியம்."

"நான் பைத்தியம் என்று உனக்கு எப்படித் தெரியும்?".

"நீ பைத்தியமாகத்தான் இருக்க வேண்டும்." பூனை சொன்னது , நீ பைத்தியமாக இல்லாவிட்டால் இந்த உலகிற்கு வந்திருக்க மாட்டாய்."

லூயிஸ் காரல் எழுதிய " அதிசய உலகில் ஆலிஸின் சாகசங்கள்" எனும் உலகப் புகழ் பெற்ற நாவலில் இப்படி ஒரு உரையாடல் நிகழ்கிறது. இதைப் படித்தபோது நான் எழுத்துலகிற்கு வந்ததைப் பற்றி யோசிக்கத் தொடங்கி விட்டேன்.

நான் ஏன் எழுத்தை என் வாழ்க்கையாகத் தேர்ந்தெடுத்தேன்?

நான் வாழ்கிறேன் என்பதற்கான ஒரே நிரூபணம் நான் எழுதுகிறேன் என்பதுதான்.

எனக்கு 10 வயது இருக்கும்போதே எனது எழுத்துக்களை / எனது ஓவியங்களை புத்தக வடிவில் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். எனவே நான் வீட்டில் எல்லோரும் தூங்கும் பிற்பகல் பொழுதுகளில் ஒரு புத்தகம் தயாரிக்கும் செயலில் ரகசியமாக ஈடுபட்டேன். அதை ஏன் நான் ரகசியமாகச் செய்தேன் என்றால் அந்த அளவுக்குக் கூச்சமும், பயமும், தனிமையும் நிறைந்தவனாக நான் இருந்தேன் என்பதுதான்.

எனவே நான் ரகசியமாக "வானவில்" என்ற பெயரில் ஒரு கையெழுத்துப் பத்திரிகை தயாரித்தேன். அது யாரோடும் கலந்து செய்யாமல் நான்

மட்டுமே தயாரித்து நான் மட்டுமே படித்துக் கொண்ட புத்தகம். 10 வயதில் நான் தயாரித்த ஒரே ஒரு பத்திரிகையின் ஒரே ஒரு பிரதியை சுமார் 60 ஆண்டுக்காலமாக நான் ஒரு கூட்டைச் சுமந்து செல்லும் நத்தையைப் போல சுமந்து வந்திருக்கிறேன். அதன் அட்டைப்படம் எங்கே போனது என்று தெரியாது. ஆனால் அதன் உள்பக்கங்கள் சிலவற்றில் எழுத்துகளை வைத்து சித்திரங்களை உருவாக்குவது, கோமாளியை பற்றி நான் எழுதிய ஒரு கவிதை, நானே படங்கள் வரைந்து உருவாக்கிய சித்திரக்குள்ளர்களும் திருடர்களும்" எனும் சித்திரக் கதை, "சிரிக்காதே" எனும் சிரிப்புப் பகுதி, விடுகதைகள், நோபல் பரிசு பற்றிய குறிப்பு, கதை மன்னர்கள் எனும் பகுதியில் "லூயிஸ் காரல்"பற்றிய குறிப்பும் நானே வரைந்த அவர் படமும் என்று நான் உருவாக்கிய அந்த பத்திரிகையை நான் இன்னமும் வைத்திருக்கிறேன். அதில் நான் என்னென்ன செய்து பார்த்தேனோ அவற்றைத்தான் நான் எனது 70 வயதிலும் செய்து பார்க்கிறேன் என்பதை நான் இன்று என் வாழ்க்கையைத் திரும்பிப் பார்க்கிறபோது உணர்ந்து அதிசயிக்கிறேன்.

லூயிஸ் காரல் ஒருமுறை எழுதியிருந்தார்:" நான் பழமையைத் திரும்பிப் பார்க்க விரும்பவில்லை. ஏனெனில் நான் அப்போது வேறு ஒரு மனிதனாக இருந்தேன்" . ஆனால் என்னைப் பொறுத்தமட்டிலும் நான் பழமையில் இருந்த அதே மனிதனாகவே இன்னமும் இருக்கிறேன் என்பதுதான் உண்மை.

பத்து வயதில் நான் வியந்து எழுதிய லூயிஸ் காரல் பற்றி எனது 70 வயதில் தேடிப் படிக்கிறபோது ஆச்சரியம் மேலிடுகிறது. " அதிசய உலகில் ஆலீஸின் சாகசங்கள் " ( ALICE'S ADVENTURES IN WONDERLAND ) எனும் உலகப் புகழ்பெற்ற கதையினை எழுதிய லூயிஸ் காரல் இளம் வயதில் என்னை எப்படி கவர்ந்தார்? ஒரு சின்னஞ் சிறுவனாக கார்ப்பரேஷன் நூலகத்தில் அவரைப் பற்றி படித்தபோது ஏனோ அவர் என் ஜாடையில் இருப்பது போல உணர்ந்தேன்.அவர் என்னைப் போலவே நோஞ்சானாக இருந்திருக்கிறார். தன்னை விட பெரிய பையன்கள் செய்யும் அக்கிரமங்களைத் தட்டிக் கேட்டு சண்டை போட முடியாதவராக இருந்திருக்கிறார். போதாக்குறைக்கு அவருக்கு 17 வயதில் கக்குவான் போன்ற தீராத இருமல் நோய்க்கு ஆளாகியிருக்கிறார். இது மட்டுமின்றி சரளமாகப் பேச முடியாமல் திக்கு வாய் கொண்டவராகவும்

இருந்திருக்கிறார். பெரியவர்களிடம் பேசும்போது திக்கித் திக்கிப் பேசிய அவர் சிறுவர்களிடம் சரளமாகப் பேசக்கூடியவராக இருந்திருக்கிறார். இத்தகைய ஒரு சிறுவன்தான் பின்னாளில் "அதிசய உலகில் ஆலீசின் சாகசங்கள் " எனும் உலகம் வியக்கும் கதையினை எழுதி இருக்கிறான் என்றால் இதன் பின்னாலிருக்கும் உளவியல்தான் என்ன?

மனிதனின் செயல்பாடுகளைக் குறித்து அறிவியல்ரீதியாக ஆராய்ந்தவர்கள் படைப்பிலக்கியத்தின் உளவியல்ரீதியான உந்துதல் குறித்து மிகக் குறைவாகவே ஆராய்ந்திருக்கிறார்கள். படைப்பிலக்கியத்தின் மனிதன் தன் மனதைச் சதா செலுத்துவதின் பின் இருக்கும் மர்மம்தான் என்ன? படைப்புச் செயல்பாடு என்பது மிகவும் சிக்கலான, பல்வேறு அடுக்குகள் கொண்ட பன்முகப் பரிமாணம் கொண்ட ஒரு செயல்பாடு என்பது நிரூபணம் ஆகியிருக்கிறது.

ஆனால் படைப்பு சக்தி மிக்கவர்கள் தன்னைத்தானே நிர்வகித்துக் கொள்ளும் தன்மை, உள்முகமாக சிந்தித்தல், அனுபவங்களுக்குத் தன்னைத் திறந்து வைத்திருத்தல், சமூக விதிகளைக் கேள்விக்கு உட்படுத்துதல், தன்னம்பிக்கை, தன்னைத்தானே ஏற்றுக் கொள்ளுதல், பேரவா , உணர்ச்சி வசப்படுதல், தனிமையை அதிகம் தேடுதல் ஆகிய குணங்களைக் கொண்டிருப்பார்கள் என்று ஒரு உளவியல் ஆய்வில் முடிவு செய்துள்ளனர். எனவேதான் கலைஞர்களும் எழுத்தாளர்களும் அழகியல் பார்வை கொண்டவர்களாகவும், எதையும் துருவித் துருவி தெரிந்து கொள்பவர்களாகவும், ஜாக்கிரதை உணர்வு குறைந்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள்.

நான் 10 வயதில் எனது கையெழுத்து பத்திரிகையில் நான் எழுதி இருப்பதை அப்படியே உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இதோ நான் லூயிஸ் காரல் பற்றி எழுதியது:

" என்ன அற்புத உலகம்? புட்டியிலுள்ள நீரைக் குடித்தால் உடல் குறுகும். அப்போது வண்ணாத்திப் புழுவைக் கண்டுகூட பயப்பட வேண்டியிருக்கிறது. ஒரு ரொட்டித் துண்டைத் தின்றால் உடல் நீளும். அப்போது ராணியைக் கூட அலட்சியப் படுத்தத் தோன்றும். அதிசய உலகில் ஆலிஸ் சந்திக்கும் ஜந்துக்கள் எத்தனை விசித்திரமானவை?

இந்தக் கதைகள் எழுந்த விதமே மிகவும் ரஸமானது. ஆசிரியர் லூயிஸ் காரலுக்கு ( இவரது உண்மைப் பெயர் சார்லஸ் டாட்சன் ) குழந்தை கதையெழுதி புகழடையும் நோக்கமே கிடையாது. மதகுருவின் மகனான இவர் முதலில் நன்கு படித்து கணிதத்தில் நிபுணரானார்.ஆனால் சரளமாகப் பேச்சு வராததால் கணித பேராசிரியனார். கல்லூரித் தோழர் ஒருவரது குழந்தையுடன் விளையாடுவதுதான் இவரது பொழுது போக்கு. அக்குழந்தைகளில் தன்னை மிகவும் கவர்ந்தவள் ஆலீஸ் என்னும் பெண். இவளுக்கு அவர் ஏராளமான கதைகள் கூறுவார். இக்கதைகளில் ஒன்றுதான் அதிசய உலகில் ஆலீஸ்."

இதனை நான் எழுதியபோது லூயிஸ் காரலைப் போலத்தான் நானும் என்று ஏனோ பைத்தியக்காரத்தனமாக நம்பினேன்.

முழுநேர எழுத்தாளனாக வாழ்வது என்பது என்னைப் பொறுத்தவரையிலும் ஒரு ரொமான்டிக் கனவு. எழுத்தாளன் என்பவன் ஏகாந்தமான ஒரு வாழ்க்கை முறையை நாடுபவன் என்பது என் முழு நம்பிக்கையாக இருந்தது.

நான் கலந்துறவாடிய பிரபல தமிழ் எழுத்தாளர்கள் தங்களுக்கென்று தனிமையான வாழ்க்கையை மேற்கொண்டிருந்ததை நான் கண்ணால் பார்த்திருக்கிறேன்.

ஒரு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால் எழுத்தாளர் பிரபஞ்சனையே எடுத்துக் கொள்ளலாம். அவரது வாழ்நாளின் பெரும்பகுதியை மேன்ஷன்களிலும் , பீட்டர்ஸ் காலனி குடியிருப்பிலும், ஓட்டல் அறைகளிலுமாகவே குடும்பத்தை விட்டு தனித்து வாழ்ந்து வருபவராகவே இன்றைக்கு வரையிலும் வாழ்ந்து வருகிறார். இன்று மருத்துவமனையில் இருக்கும்போதுகூட அவரைச் சூழ்த்திருப்பவர்கள் இலக்கிய நண்பர்களாகவே இருக்கிறார்கள். காரணம் எழுத்து என்பது ஏகாந்தத்தை நாடும் ஒரு கலையாகவே உலகின் எல்லா பாகங்களிலும் இருந்து வந்திருக்கிறது. எழுத்தாளன் என்பவன் பிரபலமானவர்களையும், மிகப்பெரிய செல்வந்தர்களையும் நன்றாக அறிந்தவன்தான். என்றாலும் ஒரு சாதாரன வாழ்க்கை வாழக்கூடிய ஒருவனாகவே இருந்து வந்திருக்கிறான். ஏனெனில் எழுத்து என்பது பணம் சம்பாதிப்பதற்கான ஒரு

தொழிலாக தமிழகத்தில் இல்லை. கலைஞனுக்கு என்று பிரத்யேகமான ஒரு மூலை நமது சமூகத்தில் உருவாகவில்லை.

எழுதுவது என்பதற்காக நானும்கூட பலமுறை தனிமையின் குகைக்குள் சென்று விடுவது வழக்கம். நான் மட்டுமல்ல. உலகின் தலைசிறந்த எழுத்தாளர்களும் எழுத்தாளனின் தனிமை பற்றி எழுதியிருக்கிறார்கள். எர்னஸ்ட் ஹெமிங்வே தனது நோபல் உரையில் இது பற்றி குறிப்பிடுகிறார். எழுதுவது என்பதற்கான வடிவத்தைத் தேடிக் கண்டுபிடிப்பது என்பதற்குத்தான் இந்தத் தனிமை தேவைப்படுகிறது.

என்னைப் பொறுத்தவரையிலும் எல்லா இலக்கிய முயற்சிகளும் செயற்கையானவைதான். தான் வாழும் பண்பாட்டுக்கும் காலத்துக்கும் உகந்த தொனியும், உணர்வுநிலையும் கிடைக்கிறவரை எழுதி எழுதி பார்க்கிறார்கள் எழுத்தாளர்கள். ஆனால் தனிமையின் குகைக்குள் நுழைந்தபிறகு நமது ஆன்மாவின் குரலை நாமே கேட்கத் தொடங்கி விடுகிறோம். அதன் பிறகு மெல்ல அதனோடு பேச்சுக் கொடுக்கத் தொடங்கி விடுகிறோம். இனி நம்மை யாரும் தடுக்கவியலாது. நமது இலக்கிய வடிவம் மிகவும் இயல்பானதாகவும், போலச் செய்தல் இல்லாததாகவும் மாறிவிடுகிறது. நாம் எழுதும் செயலைச் செய்ய எந்தவித மனத்தடையும் இன்றி இரவு பகலாக அதற்குள் மூழ்கத் தொடங்கி விடுகிறோம். அப்போதுதான் எழுத்தாளனுக்குள் இருக்கும் ஆவி எழுத்து வந்து தனது சுயரூபத்தைக் காட்டுகிறது. மனிதத்தன்மை குறைந்து விட்ட உலகத்தில் மனிதநேயத்தைக் கட்டி எழுப்பத் தொடங்குகிறது. கடவுள் நோவாவை அழைத்து ஒரு கப்பல்கட்டி மொத்த ஜீவராசிகளையும் காப்பாற்றச் சொன்னது மாதிரி , யாரோ தன்னை குரல் கொடுத்து அழைத்து தனது எழுத்தின் மூலமாக உண்மையோடும் உத்தமத்தோடும் வாழத்துடிப்பவர்களுக்கு உத்தரவாதமளிக்கும் ஓர் உலகைக் கட்டி எழுப்பச் சொன்னதுபோல உணரத் தொடங்கி விடுகிறான் எழுத்தாளன்.

காஃப்கா தனது “உருமாற்றம்” கதையில் காலையில் தூங்கி எழுந்து பார்த்தால் தான் ஒரு கரப்பான் பூச்சியாக மாறி விட்ட ஒருவனின் கதையைச் சொல்லி கரப்பான் பூச்சியாக மாறிவரும் மனிதர்களை உசுப்பி எழுப்புகிறார். தாஸ்தாவெஸ்கி தனது ”சூதாடி” நாவலில், வெற்றி கொள்வோம் என்ற வெறியில் மேலும் மேலும் தோற்றுக் கொண்டு

போகும் வாழ்க்கையைக் காட்டி நம்மை உஷார் படுத்துக்கிறார். ஆல்பர்ட் காம்யூ தனது “அந்நியன்” நாவலின் மூலமாக மனிதன் தான் வாழ்வதற்காக தொடர்ந்து பல அர்த்தமற்றச் செயல்களில் ஈடுபட்டு வருவதை எடுத்துக்காட்டி வாழ்க்கையின் அர்த்தமற்ற தன்மையை நோக்கி வாசகனைத் தொடர்ந்து சிந்திக்க வைக்கிறான். இப்படி எழுத்தை வாழ்தல் என்பதைத் தேர்ந்தெடுத்து விடுகிற எழுத்தாளர்கள், தோல்விகளால் சூழப்பட்டிருக்கிற இந்த உலகில் தனது ஆன்மாவிலிருந்து எதிரொலிக்கிற சத்தியத்தின் குரல்களை எழுத்தாகப் பதிய வைப்பதின் மூலமாக வாழ்க்கை குறித்த விசாரணையைத் தொடர்ந்து செய்துகொண்டே இருக்கிறார்கள்.